## SAFETY FIRST பூஜை கால விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு SAFETY FIRST

நல்லதையே நினைப்போம்! முன் எச்சரிக்கையாக இருப்போம்!

இத்தகவல் அனைத்தும் பூஜை காலத்தில் ஏற்படும் தீ / வழுக்கல் / சறுக்கல் / இடறுதல் ஆகியவற்றால் ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் முன் எச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள்

நமது இல்லத்திற்கு வருகை தருபவர்கள் மகிழ்ச்சியாக வீடு திரும்புவது நமது பொறுப்பு மற்றும் கடமை என்கிற நல்லெண்ணத்தில் முன் எச்சரிக்கை பாதுகாப்புநடவடிக்கைகள் தேவை.

### தீ தடுப்பு

பாலிஸ்டர், நைலக்ஸ், துணிகளை முற்றிலும் தவிர்க்கவும்.
பூஜை காலத்தில் பருத்தி ஆடைகளை மட்டும் பயன்படுத்தவும்
சேலையின் முந்தானை, சுடிதார் மேல் துணியை விளக்கின் அருகில் செல்லும் பொழுது இருக்கமாக கட்டவும்
நடமாடும் இடங்களில் மற்றும் வாசற்படியின் இரு புறங்களிலும் அகல்விளக்கு, காமாட்சி விளக்கு ஏற்ற வேண்டாம்
ஊதுவத்தியும் பாதுகாப்பற்ற ஒன்றே, நிறைய ஊதுவத்திகளை ஒரே நேரத்தில் ஏற்ற வேண்டாம், 2 ஊதுவத்தியை வாழைப்பழத்தில் சொருகி ஏற்றவும்
விளக்கு பராமரிப்புக்காக ஒருவரை நியமித்தல் நன்று. தீக்குச்சியை ஏற்றியவுடன் எறியும் குச்சியை நீரில் மட்டும் அணைக்கவும் தூக்கி எறியவேண்டாம்
விளக்குகளை காகிதப்பூ, துணிகள், திரைச்சீலை அருகில் வைக்கவேண்டாம்
பூஜை இடத்தில் வாளியில் நீர், கோனி, மணல் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்கவும்
நுழையும், வெளியேறும் வழியில் கேஸ் அடுப்பை வைத்து சமையல் செய்ய வேண்டாம்
நுழையும்,வெளியேறும் வழி எபபொழுதும் காலியாக (FREE) இருத்தல் நன்று
பூஜை இடம் கீழ் தளமும், சமையல் மேல் தளமும் இருத்தல் நன்று
தீக்காயம் பட்ட இடத்தில் ஐஸ் கட்டியை வைக்கவும், பர்னால் தடவவும், பாதிக்கப்பட்டவரை காற்றோட்டமாக அமர வைத்து அமரவைத்து நிறைய நீர் குடிக்க தரவும் பின்னர் முறையான மருத்துவ சிகிச்சை தரவும்

### வழுக்கல் / சறுக்கல் / இடறுதல்

எண்ணெய், நெய், நீர் சிந்தினால் பழைய பருத்தி துணி கொண்டு உடனே துடைக்கவும்.
விளக்கின் அடியில் தட்டு வைத்தால் எண்ணை சிந்துவதால் வழுக்கி விழுவதை தடுக்கலாம்.
விளக்கில் எண்ணெய் ஊற்ற குறுகிய வாய் பாத்திரம்(கண்ணாடி புட்டியை தவிர்க்கவும்) சரியான அளவு கரண்டியை பயன் படுத்தவும்.
சமதளத்தில் விளக்கை வைக்கவும். ஜமக்காளத்தின் மேல் விளக்கை வைக்க வேண்டாம்.
வாசல்படி, குளியல் கழிவறை நுழைவில் சறுக்காத வகையில் ரப்பர் ஷீட் அல்லது கோணி போடவும்.
தேவைக்கு அதிகமான அளவில் நெருக்கமாக நாற்காலியை பயன்படுத்தவேண்டாம்.
முடிவடையாத பாதுகாப்பற்ற ஆபத்தான கட்டுமான பகுதிகளுக்கு குழந்தைகள், வருகை தருபவர்கள் நுழையாமல் இருக்க தகுந்த ஏற்பாடு செய்யவும், எச்சரிக்கை என்று எழுதி ஒட்டவும்.
தேன், பன்னீர் புட்டிகளை வெறும் கைகளால் திறக்க வேண்டாம்.
குழந்தைகள் கைபடும் இடங்களில் உள்ள கண்ணாடி பொருட்களை அப்புறப்படுத்தவும்.
குழந்தைகள் கைபடும் இடங்களில் உள்ள மின்சார பிளக் பாயின்ட்களை நன்கு மூடிவைக்கவும்.
பலவீனமான சிலாப் உள்ள செப்டிக் டாங்க் அருகில் நுழைய தடை ஏற்படுத்தவும்
பாதாள குடிநீர் தொட்டி(SUMP) மூடியை நன்கு மூடவும். சாலையில், மொட்டை மாடியில் குழந்தைகள் விளையாட அனுமதிக்க வேண்டாம்.

### அவசர கால தேவை

மின் தடை ஏற்பட்டால் சமாளிக்க 2 பெட்ராமாஸ் விளக்கு, டார்ச் லைட் / எமர்ஜென்சி லைட்
எலக்டிரிக் டெஸ்டர், இன்ஸ்லேஷன் டேப், ஒரு துண்டு ஒயர்.
பூஜையின் பொழுது எதிர்பாராத விதமாக புகை அதிகமானால் சிலரின் உடல்நிலை, குழந்தைகள் நலன்கருதி புகையை வெளியேற்ற டேபிள் ஃபேன் (**FAN**) மற்றும் **Extention Wire Box** தேவை.

**தீ அணைப்பு துறை, அருகில் உள்ள மருத்துவமனை, தனியார் அவசர ஊர்தி,**
**24 மணி நேர மருந்தகம், காவல் நிலைய தொலைபேசி எண்களை அறியவும்**
**முதல் உதவி பெட்டி, முதல் உதவி அறிந்த நபர் தேவை**

BALU.SARAVANA SARMA, Prohithar-Astrologer, Ph : 2226 1742 / 98403 69677

© This information's are intellectual property Please do not copy or reproduce without permission